DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous **CC.No. 46 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | அஜீத் (PW. 1) |
| Father/Husband Name | : | பாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day March of 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:—**

நான் சிவகாசியில் உள்ள ஆனைக்கூட்டம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து இருக்கிறேன். கடந்த 29.10.2020 ம் தேதி வக்கனாங்குண்டில் எனது மாமா திருமணத்திற்கு வந்திருந்தேன். திருமணம் முடிந்த பின் 3.00 மணியளவில் எனது நண்பரிடம் ஹீரோ எச்எப் என்ற இருசக்கர வாகனத்தை எனது தாத்தாவையும், மருமகனையும் கீழஉப்பிலிக்குண்டில் விடுவதற்காக வாங்கினேன். நான் வண்டியை ஓட்ட எனக்கு பின்னால் எனது மருமகன் மற்றும் எனது தாத்தா ஆகியோர்கள் தூத்துக்குடி—மதுரை தேசிய நெடுஞ்சாலையில் வக்கானங்குண்டு சங்ஜான் அருகே கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டை கடந்து கீழஉப்பிலிக்குண்டு போவதற்காக கடந்து செல்லும் போது ரோட்டின் மையபகுதியில் மதுரையிலிருந்து தூத்துக்குடி நோக்கி வந்த TN 32 Y 5172 என்ற பதிவு கொண்ட மகேந்திரா வேன் அதிக வேகமாகவும், கவனிக்காமல் வந்து எனது இருசக்கர

வாகனத்தில் பின்புறம் மோதியதில் நான், தாத்தா மற்றும் எனது மருமகன் ஆகியோர் கீழே விழுந்ததில் தாத்தாவிற்கு மூக்கிலும், காதிலும் ரத்தம் வந்தது. எனது தாத்தா சம்பவ இடத்தில் இறந்துவிட்டார். எனது மருமகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது, அவனை காரியாபட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். எனக்கு தோள்பட்டையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. வண்டியை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **அசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி–**

வண்டியில் 3 நபர்கள் பயணம் செய்தோம் என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும் போது எனது தாத்தா பின்னாடியும், எனது மருமகன் எனக்கு முன்னாடியும் உட்கார்ந்திருந்தார்கள் என்று சொன்னேனா என்றால் சொல்லவில்லை. புகார் மனுவை யார் எழுதினார்கள் என்றால் எனது மாமா எழுதி கொடுத்தார், காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். அந்த புகார் மனுவில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் விபத்து ரோட்டின் மையப்பகுதியில் நடந்ததாக கூறியதை தான் போலீசார் விசாணையில் சொன்னேனா என்றால் ஆமாம். விபத்திற்கு காரணம் எதிரி இல்லை, நான் தான் சாலை விதிகளை கடைபிடிக்காமல் அஜாக்கிரதையாகவும், அதிகவேகமாகவும் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் என்னை எந்த தேதியில், எத்தனை மணிக்கு, விசாரணை செய்தார்கள் என்றால் 29.10.2020 ம் தேதியில் மாலை சுமார் 5.00 – 5.30 மணியளவில் விருதுநகர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன் பின்பு காரியாபட்டி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

**மறு விசாரணை :–**

**இல்லை**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous **CC.No. 46 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : கண்ணன் (PW.2)
Father/Husband Name : அய்யாவு
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day March of 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் கீழஉப்பிலிக்குண்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து இருக்கிறேன். கடந்த 29.10.2020 ம் தேதி வக்கனாங்குண்டில் எனது மாமா திருமணத்திற்கு வந்திருந்தேன். திருமணம் முடிந்த பின் 3.00 மணியளவில் எனது மருமகன் ஹீரோ எச்எப் என்ற இருசக்கர வாகனத்தை எனது அப்பாவையும் எனது மகனையும் கீழஉப்பிலிக்குண்டில் விடுவதற்காக வாங்கினார். எனது மருமகன் வண்டியை ஓட்ட அவருக்கு பின்னால் எனது மகன், எனது அப்பா ஆகியோர்கள் தூத்துக்குடி–மதுரை தேசிய நெடுஞ்சாலையில் வக்கானங்குண்டு சங்ஜான் அருகே கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டை கடந்து கீழஉப்பிலிக்குண்டு போவதற்காக கடந்து செல்லும் போது ரோட்டின் மையபகுதியில் மதுரையிலிருந்து தூத்துக்குடி நோக்கி வந்த TN 32 Y 5172 என்ற பதிவு கொண்ட மகேந்திரா மெக்ஸி வேன் அதிக வேகமாகவும்,

கவனிக்காமல் வந்து எனது மருமகன் இருசக்கர வாகனத்தில் பின்புறம் மோதியதில் எனது மருமகன் மற்றும் எனது அப்பா ஆகியோர் கீழே விழுந்ததில் அப்பாவிற்கு மூக்கிலும், காதிலும் ரத்தம் வந்தது. எனது அப்பா சம்பவ இடத்தில் இறந்துவிட்டார். எனது மகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது, அவனை காரியாபட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். எனது மருமகனுக்கு காலிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. வண்டியை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதகுவி–**

போலீசார் விசாரணையில் இருசக்கர வாகனத்தில் எனது மருமகன் வாகனம் ஓட்டியதாகவும், அதற்கு பின்னாடி எனது மகன் அவருக்கு பின்னால் எனது அப்பா உட்கார்ந்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் கிழக்கு பக்கம் உள்ள பஸ் ஸ்டாப்பில் நின்று பேசியதாக சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அந்த இடத்தில் ஒரு 5 நபர்கள் நின்றிருந்தார்கள் என்றால் சரிதான். முதல் விசாணையில் விபத்து ரோட்டின் மையப்பகுதியில் நடந்ததாக கூறியதை தான் போலீசார் விசாணையில் சொன்னேனா என்றால் ஆமாம். விபத்து நடந்தவுடன் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில், எத்தனை மணிக்கு, விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவத்தினத்தன்று மாலை சுமார் 3.00 – 3.45 மணியளவில் விசாரித்தார்கள். அதன் பின் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். விபத்திற்கு காரணம் எனது மருமகனின் அதிவேகம், அஜாக்கிரதை, கவனக்குறைவால் தான், எதிரியின் அஜாக்கிரதை கிடையாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :–**

**இல்லை**